இது ஓர்
**இலவச வெளியீடு**
(இரண்டாயிரத்து ஐநூறு பிரதிகள்)

# நிலா


சங்கீதா அச்சகம்
39, Bld de la Chapelle
Métro : La Chapelle
☎ 01 44 72 08 94



ஆடி - ஆவணி 2010 இது ஓர் கிருஷ்ணா அச்சகத்தின் விளம்பர வெளியீடு இல. 4




## பிரெஞ்சு அணியிலிருந்து விடைபெறுகிறார் ஹென்றி!

பிரான்சின் மிகச்சிறந்த கால் பந்து விளையாட்டு வீரரான கென்றி யூலை 15ம் திகதி பிரான்ஸ் அணியிலிருந்து தான் விலகுவதாக அறிவித்துள்ளார். பிரான்ஸ் அணியில் இனி என்றுமே தான் விளையாடப் போவதில்லை என தெரிவித்த கென்றி தொடர்ந்து நியுயோர்க் அணிக்காக விளையாடப் போவதாக அறிவித்துள்ளார்.

1977 ஆம் ஆண்டு யூலை 17ம் திகதி பாரிசில் பிறந்த கென்றி 1997 ஒக்ரோபர் 11 இல் தென்ஆபிரிக்காவுடனான நட்புரீதியான போட்டியில் பிரான்ஸ் அணி சார்பாக முதன்முதலாக கலந்துகொண்டார். தொடர்ந்து 1998 உலககோப்பை கால்பந்து போட்டியில் விளையாடிய கென்றி தென்ஆபிரிக்காவிற்கு எதிரான போட்டியில் பிரான்ஸ் அணிக்காக முதல் கோல் ஒன்றை போட்டார்.

இப்பொழுது பிரான்ஸ் அணியினை விட்டு விலகும் போதும் 2010 உலககோப்பை கால்பந்து போட்டியில் தென்னாபிரிக்காவிற்கு எதிராக விளையாடிய பின்னரே விலகியுள்ளார்.

1998, 2006 ஆம் ஆண்டு உலககோப்பை கால்ப்பந்தில் தலா 3 கோல்களை பிரெஞ்சு அணிக்காக போட்ட கென்றி தொடர்ந்து 4உலகக்கோப்பை காற்பந்து போட்டியில் விளையாடிய ஒரேயொரு பிரெஞ்சு வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

தியரி கென்றி 123 தடவைகள் பிரெஞ்சு அணிக்கு விளையாடுவதற்கு தெரிவு செய்யப்பட்டு 51 கோல்களை போட்டிருந்தார். இவர் உலக கோப்பை கால்ப்பந்து, Europe match, Federation match என எல்லா போட்டிகளிலும் பிரான்ஸ் அணி சார்பாக சிறப்பாக விளையாடி பிரெஞ்சு அணி வரலாற்றில் 2வது சிறந்த score maker என்றும் புகழ் பெற்றவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.















## சமூக பாதுகாப்பு அமைப்பில் 27 மில்லியாட் யூரோக்கள் பற்றாக்குறை

பிரான்சின் சமூக பாதுகாப்பு (Securite Sociale) அமைப்பில் 26,8 மில்லியாட் அதாவது 2680 கோடி யூரோக்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாறு, தொகையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமை இதுவே முதல்முறையாகும். 2008 ம் ஆண்டில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக இந்த அமைப்பில் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. எனினும் தற்போது அதி உச்சநிலையை அடைந்துள்ளது. சமூக பாதுகாப்பு அமைப்பின் பெரும்பகுதி நிதி வேலை செய்வோர் களிடம் இருந்தே அறவிடப்படுகின்றது. ஆனால் பிரான்ஸ் உட்பட உலகரீதியில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக வேலை இழந்தோர் தொகை அதிகரித்து வருவதும் ஓர் காரணமாக சொல்லப்படுகின்றது. மேலும் வேலைவாய்ப்புக்களை கூடுதலாக உருவாக்குவதன் மூலம் இப்பிரச்சினைக்கான தீர்வினைக் காண முடியும் என்று பிரான்ஸ் அரசாங்கம் நம்பிக்கை தெரிவிக்கின்றது.




# கிருஷ்ணா அச்சகம்

**தரம் - குறித்த தவணை - நியாயவிலை**

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள்,
வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும்,
மொழிபெயர்ப்பு தேவைகளுக்கும் நாடுங்கள்!

☎: 01 42 51 29 92 Fax : 01 42 51 35 25
E-mail: krishnafrance@yahoo.com



73, Rue Doudeauville - 75018 PARIS Métro : CHÂTEAU ROUGE

## அரச பாடசாலைகளில் ஆசிரியர் குறைப்பு



பிரான்சில் உள்ள அரச பாடசாலைகளில் ஆசிரியர்களின் தொகையை குறைக்க மந்திரிசபை மட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. வகுப்புக்களில் உள்ள சராசரி மாணவர்களின் எண்ணிக்கையை கணக்கில் எடுக்காமல் ஆசிரியர்களின் எண்ணிக்கையை குறைப்பது பற்றி கல்வி நிறுவனங்கள் ஆலோசிக்க வேண்டும் என பிரான்சின் கல்வி அமைச்சர் (Luc Chatel) லுக் சாத்தல் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களின் தொகையைக் கூட்டுவதன் மூலம் ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும் என கல்வி அமைச்சு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். வகுப்பில் ஒவ்வொரு மாணவரைக் கூட்டுவதன் மூலம் பிரான்சில் 10000 ஆசிரியர்களைக் குறைக்க முடியும் என்று புள்ளிவிபரங்கள் தெரியப்படுத்துகின்றன. அரசின் இந்த நடவடிக்கையையிட்டு ஆசிரியர்கள் தங்கள் குமுறல்களை வெளிக்காட்டுகின்றனர். ஆசிரியர்களின் தொழிற்சங்கமும் அரசு இந்த நடவடிக்கையை கைவிட வேண்டும் எனக் கோரியுள்ளது.

## பிரான்சில் அமைச்சர்களின் சம்பளம் 14000 யூரோக்கள்!

அபிப்பிராய வாக்கெடுப்பொன்றில் அமைச்சர்களின் சம்பளம் குறைக்கப்பட வேண்டும் என்று 84 வீதமான பிரெஞ்சு மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். தற்போதைய பொருளாதார நெருக்கடி காலகட்டத்தில் அமைச்சர்கள் எளிமையையும் சிக்கனத்தையும் கடைப்பிடித்து தங்களுடைய சம்பளத்தைக் குறைத்து முன்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும் என்று மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இங்கிலாந்திலும் ஸ்பெயினிலும் மந்திரிமாரின் சம்பளத்தை குறைப்பது சம்பந்தமாக நடைபெற்ற விவாதத்தின் பின்னர் சம்பளத்தை குறைக்க நடவடிக்கை எடுக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு அமைச்சர், எரிக் வேர்த் (Eric Worth) இந்த சம்பளத்தொகையை மாற்றியமைப்பது பற்றி ஆலோசிப்பதாகக் கூறியுள்ளார்.

மேலும் கிடைக்கின்ற தகவல்களின்படி கிறிஸ்ரின் பூத்தன் (Christin Boutin) என்பவர் நாடாளுமன்றத்தில் இருந்தமைக்கான ஒய்வூதியத்தை பெற்றுக் கொள்ளும் வேளையில் சர்வதேச அமைப்பொன்றில் பணி செய்வதன் மூலம் சம்பளத்தையும் பெற்றுக் கொண்டிருக்கின்றார். எனினும் இவ்வாறு இரட்டை வருமானம் பெறுவது சட்டரீதியாகவே உள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

### உலகின் முதல் முழு முகமாற்று சிகிச்சை

## பிரான்ஸ் வைத்தியர்கள் சாதனை



பிரான்சை சேர்ந்த டாக்டர் லாரண்ட் லான்டியரி உலகிலேயே முதல்முறையாக முழு முகமாற்று (Face Off) அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக முடித்துள்ளதாக அறிவித்துள்ளார். ஜெரோம் என்ற 35 வயது நபருக்கே இந்த முழு முகமாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப் பட்டது. ஜெரோமின் முகம் மரபணு கோளாறால் அகோரமாக இருந்தது. இதையடுத்து டாக்டர் லாரண்டை அணுகி தனது முகத்தை மாற்ற ஆபரேஷன் செய்வது குறித்து விவாதித்தார் ஜெரோம். இதையடுத்து டாக்டர் லாரண்ட் தலைமையிலான குழு இறந்து போன ஒருவரின் முகத்தை எடுத்து இவருக்கு பொருத்தி சாதனை படைத்துள்ளது. இந்த ஆபரேக்ஷன் பாரிஸ் புறநகர்ப் பகுதியில் உள்ள ஹென்றி - மான்டர் மருத்துவமனையில் யூன் 26,27 திகதிகளில் நடந்தது. ஆபரேஷன் செய்யப்பட்டவர் நன்றாக உள்ளார். அவர் தற்போது நன்றாக நடந்து கொண்டும், பேசிக் கொண்டும் இருக்கிறார். இது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த டாக்டர் லாரண்ட் புதிதாக பொருத்தப்பட்டுள்ள முகம் நோயாளியின் எலும்பு அமைப்போடு ஒன்றி விடும்என்றும் தெரிவித்தார்.

## "பயமின்றி எங்களை வாழவிடு"

### பெல்வில் பகுதியில் நடந்த ஊர்வலம்

பிரான்ஸில் களவுத்தொல்லை அதிகரிப்பை சகிக்கமுடியாத வியட்நாம், சீன சமூகத்து மக்கள் வீதிக்கு இறங்கி போர்க்கொடி தூக்கினர். பெல்வில் பகுதியிலும் ஆசிய நாட்டவரின் வர்த்தக ஸ்தாபனங்கள் பெருமளவில் காணப்படுகின்றன. இவ்வர்த்தக ஸ்தாபனங்களில் நடைபெறும் மிரட்டல்கள், கொள்ளைகள் மற்றும் வழிப்பறிகளால் வெறுப் படைந்த மக்கள் வீதிக்கு இறங்கி தங்கள் நிலையை வெளிப்படுத்தினர். பயமின்றி எங்களை வாழவிடு என்ற முக்கியகோசத்தை முன்வைத்து பதாகைகளைத் தாங்கியவாறும், ,கோசமெழுப் பியவாறும் ஊர்வலத்தை நகர்த்தினர். அவர்கள் தமது கோசங்களில் குறிப்பிட்ட சில இனத்தினரை குறிப் பிட்டும் கோசங்களை எழுப்பியதையும் அவதானிக்கக் கூடியதாயிருந்தது. இவ் ஊர்வலத்தில் சுமார் 8500 பேர் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

**உறவுகள் மேம்பட**

- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவக்க முன்வாருங்கள்!

- வேதாத்ரி மகரிஷி




**பாரீஸ்**

**மாணிக்க விநாயகர் தேர்**

பாரீஸ் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தின் 15வது தேர்த்திருவிழா 29.08.2010 ஞாயிற்றுக்கிழமை இடம்பெறுகின்றது.



நயினை அபிவிருத்திக்கழகம் பிரான்ஸ் நடாத்தும்

**நயினைச் சுடர்-1**

30.10.2010 ல் இடம்பெறுகின்றது.



## விடலைப் பருவத்தினர் மீது வன்முறை

15 முதல் 18 வயதுக்கு இடையில் உள்ள விடலைப் பருவத்தினரில் 46 வீதமானோர் உடல் ரீதியாகவோ அல்லது ஏசுதல் காரணமாகவோ பாதிப்பிற்கு உள்ளாகின்றனர் என்று இளைஞர் தொடர்பான சுகாதார நிறுவனம் ஒன்று கவலை தெரிவித்துள்ளது. இதில் 43 வீதமானோர் அவர்களின் உடல்தோற்றம் காரணமாகவே வன்முறைக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் முகப்பருக்கள் உள்ள ஆண்குழந்தைகளும் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். இன அல்லது நிற பாகுபாடுகள் மாத்திரம் காரணம் இல்லாமல் பன்முகத் தன்மையை ஏற்கின்ற நிலைமை பெருமளவில் இல்லாமையே வன்முறைக்கு காரணமாக அமைகின்றது என்றும் இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இப் பிரச்சினை சம்பந்தமாக மாசி முதல் ஆனி வரை விழிப்புணர்வு நிகழ்வுகள் பிரான்சில் பரவலாக நிகழ்த்தப்பட்டிருந்தன. குழந்தைகள் தங்கள் விடலைப் பருவத்தில் இருந்து தங்கள் இளைஞர் நிலைக்கு வர அவர்களுக்கு சமூகத்தின் ஆதரவும் உதவியும் தேவைப்படுகின்றது எனவும் இது தொடர்பாக கூடுதலான அக்கறை கொள்ளவேண்டும் எனவும் மேற்குறித்த நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

## பரீட்சையில் மோசடிசெய்த மாணவர்கள் பிடிபட்டனர்.

29 யூன் பிரான்ஸின் கல்லூரிகளில் நடைபெற்ற முக்கிய பரீட்சையான Brevet (இலங்கையில் 9 ம் வகுப்பு) இல் காலையில் பிரெஞ்சுப்பாடமும் மாலையில் கணிதப்பாடமும் நடைபெற்றது. சுமார் 7 லட்சத்து 56 ஆயிரம் மாணவர்கள் பிரான்ஸ் முழுவதும் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். தேசியரீதியாக நடைபெற்ற இப்பரீட்சையில் தேர்வு எழுதிய மாணவர்கள் தொலைபேசியை பரீட்சை மண்டபத்தினுள் எடுத்துச்சென்று அதனுதவியுடன் வெளியேயுள்ளவர்களுடன் தொடர்புகொண்டு வினாக்களுக்கான விடைகளை அறிந்து பதிலெழுதியது கண்டுபிடிக்கப்பட்டது. பிடிபட்ட 16 மாணவர்களும் 5 ஆண்டுகளுக்கு பரீட்சை எழுதமுடியாது என பரீட்சைத்திணைக்களம் தெரிவித்துள்ளது. பரீட்சை மண்டபத்தினுள் எப்படி மாணவர்கள் தொலைபேசியுடன் அனுமதிக்கப்பட்டார்கள் என்பது குறித்து விசாரணை நடைபெற்றுவருவதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## துயர் பகிர்வு



தோற்றம்: 22.08.1958
மறைவு: 13.05.2010
அமரர் த. செந்தில்வேல் (குணம்)



தோற்றம்: 28.01.1932
மறைவு: 24.05.2010
அமரர் இரத்தினம் கண்மணி



தோற்றம்: 03.11.1925
மறைவு: 17.06.2010
அமரர் மு. மாணிக்கவாசகர்



தோற்றம்: 18.10.1970
மறைவு: 02.06.2010
அமரர் ரமேஸ் சிவரூபன்



தோற்றம்: 07.05.1930
மறைவு: 06.07.2010
அமரர் பூமணி இராஜலிங்கம்



தோற்றம்: 06.04.1947
மறைவு: 27.06.2010
அமரர் எம். உதயகுமார்



தோற்றம்: 18.03.1944
மறைவு: 14.07.2010
அமரர் யோகலிங்கம் இரத்தினம்



தோற்றம்: 25.01.1991
மறைவு: 10.07.2010
அமரர் அ. நிவேதன்

## இப்படியும் நடந்தது!

இந்த சிறுவனுக்கு நான்கு வயது.
தாயார் ஏற்கனவே இறந்துவிட்டார். மிக கடுமையான பாலியல் தொற்றுநோயினால் (Sida) பாதிக்கப்பட்டிருந்த 42 வயதுடைய தந்தை. தந்தையுடனே சிறுவன் வசித்துவந்தான். ஒரு நாள் திடீரென தந்தை இறந்துவிட்டார். தந்தை இறந்ததை குழந்தைச்சிறுவன் அறிந்திருக்கவில்லை. தந்தை நீண்டதூக்கத்திலிருப்பதாகவே குழந்தை நினைத்துக்கொண்டது.
இரண்டுநாட்களின் பின் தந்தையை பராமரிக்கும் தொண்டர் நிறுவனத்தைச்சேர்ந்தவர்கள் வந்தபோதுதான் நிலமையின் கொடுமையைத் தெரிந்துகொண்டனர்.
இப்போது அச் சிறுவன் சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் பராமரிக்கப்படுகிறான். இச்சம்பவம் rue d'Italie, Marseille என்ற இடத்தில் இந்தவருடம் யூன்மாதம் இடம்பெற்றுள்ளது.



- பிறேமன்




அபுதாபியில் கட்டப்பட்டுள்ள "கெபிட்டல் கேட் " என்ற 160 மீட்டர் உயரமுடைய கட்டடம், மனிதர்களால் உருவாக்கப்பட்ட உலகின் முதன்மையான சாய்ந்த நிலை கோபுரம் என்ற சாதனைக்காக, கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது.

இது, பைசா கோபுரத்தின் சாய்மானத்தை விட நான்கு மடங்கு அதிகம். (பைசா கோபுரத்தின் சாய்மானம் 3.99 பாகை). இந்த கட்டடத்தின் 12 மாடிகள் செங்குத்தாக உள்ளன.

## பாரிசில் அண்ணாமலை பல்கலைக்கழகப் பரீட்சை

ஐரோப்பியத் தமிழர்கள் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகளை மேற்கொண்டு பட்டங்கள் பெறுவதற்காக 70, rue Philippe de Girard, 75018 Paris இல் உள்ள அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் ஐரோப்பிய வளாகத்தில் ஜனவரி, ஜுலைகளில் பரீட்சைகள் நடைபெற்றுவருகின்றன.

B.A., B.Com., B.Sc., BBA, BCA , M.A., M.Com., M.Sc. MBA., MCA. முதலானவற்றுடன் Diploma மற்றும் தமிழ்ப்புலவர், பரதநாட்டியம், இசை ஆகிய துறைகள் உள்ளன. ஆண்டுதோறும் அண்ணாமலை பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பரீட்சாளர்களாக நடாத்தும் பரீட்சைக்கு பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி, பிரித்தானியா, நோர்வே, ஆஸ்திரியா முதலான நாடுகளிலிருந்து மாணவர்கள் தோற்றிப்பட்டங்கள் பெறுகிறார்கள். இப்பரீட்சைகள் மாணவர்கள் வீட்டிலிருந்து படித்துக் கல்வி பெறும் தொலைதூரக் கல்வி முறையில் நடைபெறுகின்றன. 2005 ஆண்டிலிருந்து நடக்கும் பட்டப்படிப்பு மூலம் இதுவரைக்கும் 54 பேர் பட்டங்கள் பெற்றுப் பயனடைந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகப்புகழ் மிக்க மோனாலிசா ஓவியத்தை வரைந்தவர்பிரெஞ்சு ஓவியர் லியோனார் டோ டா வின்சி . ஓவியர் லியோனார் டோடா வின்சியின் ஓவியங்கள் பாரிஸ் நகரின் லூவர் அருங்காட்சியகத்தில் உள்ளன. அங்குள்ள புன்னகை பூக்கும் எழில்மிகு மோனாலிசா உள்ளிட்ட 7 ஓவியங்களை பிலிப்வால்டர் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு ஆய்வு செய்தது.



மோனாலிசா உள்ளிட்ட ஓவியங்கள் மீது எக்ஸ்ரே கதிர்களை பாய்ச்சி பரிசோதனை செய்தனர். அதில் மோனாலிசா ஓவியத்தை லியோனார்டோ டாவின்சி 30 அடுக்கு பெயிண்டிங் (வண்ணம்) செய்திருப்பதை கண்டறிந்தனர். மேலும் ஒவ்வொரு வண்ண கலவை அடுக்குகளும் 40 மிக்ரோ மீட்டர் அளவுக்கு நுண்ணியமாக வரையப்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டது.



**உங்கள் சைக்கிளை மிதிப்பதன்மூலம் செல்போனை சார்ஜ் செய்து கொள்ளலாம்!**

செல்போனை சார்ஜ் செய்யாமல் வெளியில் சென்றுவிட்டீர்களா? கவலை வேண்டாம். சைக்கிள் இருந்தாலே போதும் செல்போன் சார்ஜ் ஆகிவிடும். ஆம், செல்போன் சைக்கிள் சார்ஜரை நோக்கியா ஒய்ஜ் நிறுவனம் நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாமில் அறிமுகம் செய்தது.

மேலும், ஐரோப்பிய நாடுகளில் அலுவலகம், ஷொப்பிங் செல்பவர்களில் பெரும்பாலானவர்கள் சைக்கிளில் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதன் அடிப்படையில்தான் சைக்கிள் வழி செல்போன் சார்ஜரை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் தமக்குத் தோன்றியதாகவும் குறிப்பாக ஆம்ஸ்டர்டாமில் சைக்கிள் பயன்படுத்துபவர்கள் அதிகம். எனவேதான் இதை இங்கு அறிமுகம் செய்துள்ளோம். பின்னர் உலகின் மற்ற நாடுகளிலும் அறிமுகம் செய்யப்படும் எனவும் நோக்கியா நிறுவனச் செய்தித் தொடர்பாளர் லியோ மெக்கே தெரிவித்துள்ளார். இந்த சார்ஜர், சைக்கிள் சக்கரம் சுற்றும்போது அதிலிருந்து முகப்பு விளக்கு எரிவதைப் போலவே, செல்போனுக்கு தேவையான மின்சாரத்தை கிரகித்துக் கொள்ளும். இதனால் மின்சாரப் பயன்பாடு குறையும், சுற்றுச்சூழலுக்கும் எவ்வித கேடும் ஏற்படாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரெஞ்சு குடியரசு விழாவில் ஆபிரிக்க நாடுகளுக்கு நன்றியும், மரியாதையும்



பதினாறாம் லூயியின் ஆட்சிக்காலத்தில் பொதுமக்கள் கஷ்டம், அநீதி, வறுமை, வரிச்சுமை, கொடுமை போன்றவற்றால் துவண்டனர். சமூகக் கொந்தளிப்பினால் மக்கள் மன்னரை எதிர்த்த போராட்டம் புரட்சியாக வெடித்தது. 1789 ஜுலை 14 அன்று பஸ்திக் கோட்டையை - Bastille உடைத்தனர். இதன் விளைவாக மன்னராட்சி வீழ்ந்தது. பிரான்சில் முடியாட்சி ஒழிந்து குடியாட்சி மலர்ந்த நன்னாள் 1789 ஜுலை 14. அன்றிலிருந்து இன்று வரை ஜுலை 14 குடியரசு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பிரான்ஸ் ஒரு பதினான்கு ஆபிரிக்க நாடுகளை காலனித்துவப் படுத்தி தன்னாட்சிக்குள் வைத்திருந்தது. இந்த ஆபிரிக்க நாடுகளிலிருந்து இரண்டு உலகயுத்தங்களில் பிரான்சுக்காகப் போராடி பல்லாயிரக்கணக்கான ஆபிரிக்கர்கள் உயிரிழந்தனர். அடுத்தடுத்த ஆண்டுகளில் இந்நாடுகள் சுதந்திரம் பெற்றன.

சுதந்திரம் அடைந்து ஐம்பது ஆண்டுகள் நிறைவுறுவதையிட்டும், இந்நாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவும். இந்நாடுகளின் தலைவர்கள் 2010 ஜுலை 14 குடியரசு தின விழாவுக்கு கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தனர்.

படைகளின் அணிவகுப்பில் ஆபிரிக்க நாடுகளின் படைவீரர்கள் முதன்முதலில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்.எஸ்)

## பாரீஸ் 18 இல் புதிய உயர்நீதிமன்றம்!

பாரீஸ் (XVIII) நகரில் மேலும் ஒரு உயர்நீதி மன்றம் (Palais de justice) புதிதாக 2015 ம் ஆண்டு திறக்கப்படவிருக்கிறது.
இது பாரீஸில் 2015ம் ஆண்டு இயங்கவிருக்கும் இரண்டாவது நீதி மன்றமாகும்.



## கால்நகங்களை வெட்டுங்கள்!

கால்நகங்களை வெட்டாமலிருப்பது சுகாதாரத்திற்கு தீங்கெனச் சொல்கின்றனர். எப்படி?
கால் மற்றும் கை நகங்களை அவ்வப்போது வெட்டி, பற்றீரியாக்கள், அழுக்கு சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சதையே பிய்ந்துவிடும் அளவு மிக நெருக்கமாக கால்நகங்களை வெட்டும் பழக்கம் சிலரிடம் உள்ளது.
பிய்ந்து போன சதைவழியே பற்றீரியாக்கள் உடலுள் ஊடுருவி விடும். நீரிழிவு நோயாளிகள், மிகவும் கவனமாக நகங்களை கட் செய்யவேண்டும். ஒரு போதும் சதையை பிய்த்துவிடக் கூடாது. காலை சரியாகப் பராமரிக்கவில்லையெனில் பெரும் பாதிப்பு உருவாகும்.


**ரூபி**

பெறுமதிமிக்க உங்கள் வீடியோ பிரதிகளை நீண்ட காலத்திற்கு பாதுகாக்க விரும்புகின்றீர்களா? சீடி தட்டுக்களில் இலகுவாக மாற்றித்தருகிறோம்.
மற்றும்
உங்கள்
போட்டோ கொப்பி
தேவைகளுக்கும்
எம்மை நாடுங்கள்!

**10, RUE LABAT**
**75018 PARIS**
M°: Marcadet Poissonniers
**Tél.: 01 42 51 80 78**





சில ஆண்டுகளுக்கு முன் பிரெஞ்சுத் தொலைக்காட்சியில் ஸ்ரார் அக்கடமி நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த போது, தமிழில் இப்படி ஒரு நிகழ்ச்சி முடியாதா என ஏக்கம் இருந்தது. ஆனால் அண்மையில் சுப்பர் சிங்கர் யூனியர் நிகழ்ச்சியை பார்த்தபோது அந்த ஏக்கம் கலைந்தது. மனது உருகியது. அல்காவும், நிரோசனும், நித்தியஸ்ரீயும், சிறிகாந்தும் இதயத்தைப் பிளிந்தெடுத்தார்கள். சம்பந்தர் மூன்று வயதில் தேவாரம் பாடியதாக இப்போது நம்புகிறோம். என்ன அற்புதம்! சின்னக் குழந்தைகள் எப்படி எங்களை கட்டிப் போடுகிறார்கள் ! இப்ப டி ஒரு நிகழ்ச்சி எப்படி தமிழில்! ..ம்! தமிழும் பலதுறைகளில் வளர்ந்து கொண்டுதான் போகிறது.

பாடகர் மனோவிடம் இப்படி ஒரு திறமையா? எவ்வளவு இயல்பான நகைச்சுவையோடு நிகழ்ச்சியை சிறப்பிக்கிறார். சித்திராவும், மால்குடி சுபாவும் எங்கள் குடும்பத்தில் ஒருவராகிவிட்டார்கள். நாங்கள் இழந்தவை அதிகம். ம் .. இனியென்ன நாங்கள் சங்கீதம் கற்றுக்கொள்ளவா முடியும்? ஏக்கம் மட்டும்தான் மிஞ்சுகிறது. இந்த நிகழ்ச்சிக்கூடாக எங்களுக்கு பல விடயங்களைப் படிப்பித்தார்கள். சங்கீதம் ரசனை மட்டுமல்ல. உணர்வுபூர்வமாக வடிவமைத்த நிகழ்ச்சியில் நல்ல பண்புகளையும் தான் சொல்லித் தந்தார்கள்.

ஆரம்பத்தில் சராசரி மனிதனாக காட்சி தந்த குரல் பயிற்சியாளர் அனந் வைத்தியநாதன் நிகழ்ச்சி முடியும் தருணத்தில் எங்களுக்கு எவ்வளவு அழகானவராக காட்சிதருகிறார். அழகு, ஆற்றலுடன் இணைந்ததே என்பதற்கு திரு. அனந்த வைத்திய நாதன் ஒரு உதாரணம்.

சுப்பர் சிங்கர் யூனியரை பார்த்தவர்கள் உற்சாகத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள். பார்க்காதோர் சீடிகளைப் பெற்று பரவசமடையுங்கள்! - அசோகா



## நிலாவினைப் பெற்றுக்கொள்ள

**சங்கீதா அச்சகம்**
39, Bld de la Chapelle - 75010 PARIS

**RUBIS**
10, Rue Labat - 75018 PARIS

**MAGENTA**
77, Bld. de Magenta - 75010 PARIS

**ASI BOUCHERIE**
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**VANNI BOUCHERIS**
26, Rue Perdonnet - 75010 PARIS

**Sachi Education**
70, rue Philippe de Girard - 75018 PARIS

**NRS Coiffure**
5B Avenue Alexis Varagne-95400 Villiers Le Bel

**மாலா மளிகை**
4 Place de Salengro- Garges Les Gonesse Sarcelles

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 PARIS

## பாரீஸில் தமிழர் நிகழ்வுகள்

- **பாரீஸ் தமிழர் கல்வி நிலைய விளையாட்டுப்போட்டி**

பாரீஸ் தமிழர் கல்வி நிலைய விளையாட்டுப்போட்டி 13.06.2010 இடம்பெற்றது.

- **ராதாகிருஸ்ணர் ரதோற்சவம்**

பாரீஸ் ராதாகிருஸ்ணர் ரதோற்சவம் 04.07.2010 நடைபெற்றது.

- **தமிழர் விளையாட்டு விழா**

பாரீஸ் தமிழர் விளையாட்டு விழா 04.07.2010 இடம்பெற்றது

- **மனம் திறப்போம்**


வேலணை பழைய மாணவர் சங்க பாரிஸ் கிளையின் ஒன்றுகூடல் நிகழ்வு லாச்சப்பல் சாளினி உணவகத்தில் 21.06.2010 இல் இடம்பெற்றது. அன்றைய தினம் மனம் திறப்போம் எனும் தலைப்பில் ஆவணம் ஒன்றும் வெளியிடப்பட்டது.

## Blanc Mesnil இல்

நடைபெற்ற 14யூலை சுதந்திரதினக் கொண்டாட்டத்தின் போது பிரான்ஸின் பிரபல பாடகி ஹெலன் சேகரா வின் சிறப்பு நிகழ்ச்சி இடம்பெற்றது.



வழமைபோல நடைபெறும் வாணவிளையாட்டுக்கள் காலநிலை காரணமாக பாதுகாப்பு கருதி இரத்துச்செய்யப்பட்டது.




## தந்தையர் தினம்

தந்தையர்களுக்குப் பரிசளிப்பது, சிறப்பு விருந்தளிப்பது, குடும்பத்தினருடன் வெளியில் சென்று கொண்டாடுவது என இது கொண்டாடப்படுகிறது.

உலகிலேயே முதல் முறையாக 1910ம் ஆண்டு ஜூன் 19ம் தேதி வாஷிங்டனில் தந்தையர் தினம் கொண்டாடப்பட்டது. இதற்கான முயற்சிகளை எடுத்தவர் சோனாரா டாட் என்ற பெண்மணி ஆவார்.

1909ம் ஆண்டு ஸ்போகேனில் உள்ள சர்ச்சில் அன்னையர் தினம் பற்றிக் குறிப்பிட்டதைக் கேட்ட அவர் தந்தையர் தினமும் கொண்டாடப்பட வேண்டும் என கருதினார். அடுத்த ஆண்டே அதை அவர் நிறைவேற்றினார். அன்று முதல் அது உலகெங்கும் பிரபலமாகி தற்போது உலக அளவில் கொண்டாடப்படும் தினமாகியுள்ளது.

1910ம் ஆண்டு கொண்டாடப்பட்ட தந்தையர் தினத்தின்போது உயிருடன் இருக்கும் தந்தையருக்கு சிவப்பு ரோஜா கொடுத்து வாழ்த்து தெரிவித்தனர். இறந்த தந்தையரின் சமாதிகள், படங்களுக்கு வெள்ளை ரோஜா கொடுத்து அவர்களுக்கு மரியாதை செலுத்தினர்.

பின்னர் 1966ம் ஆண்டு அமெரிக்க அதிபர் லிண்டன் ஜான்சன், தந்தையர் தினத்தை அங்கீகரித்து உத்தரவிட்டார். அதன்படி ஆண்டுதோறும் ஜூன் மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை தந்தையர் தினமாக கொண்டாடப்படும் என அவர் உத்தரவிட்டார். அதன் பின்னர் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு 1972ம் ஆண்டு, ஒரு சட்டத்தின் மூலம் தந்தையர் தினத்தை தேசிய விடுமுறை தினமாக அதிபர் நிக்சன் அறிவித்தார்.

தந்தையர் தினம் தவிர ஆடவர் தினம் என்ற ஒன்று ஆண்டுதோறும் நவம்பர் 19ம் தேதி கொண்டாடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இது, தந்தையர் ஆகாத ஆண்கள், இளைஞர்களுக்கானதாகும்.

## தம்பிரான் வணக்கம்

முதலாவது தமிழ் நூல் 1578 அக்டோபர் 20 ஆம் திகதி வெளிவந்தது. அன்றைய தினம் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கடதாசி மூலம் போர்த்துக்கேய மிசனரியான ஹென்ரிக் ஹென்ரிக்குயஸ் "தம்பிரான் வணக்கம்" என்ற நூலை பிரசுரித்துள்ளார்.

10x14 c.m அளவுடைய 16 பக்கங்களிலான இப்புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமும் 24 வரிகளைக் கொண்டிருந்தது. அதில் பயன்படுத்தப்பட்ட தமிழ் எழுத்துருவானது ஓலைச்சுவடிகள், கற்களில் பயன்படுத்தப் பட்டவையென தமிழ் வரலாற்றியலாளரான புலவர் எஸ்.ராஜு கூறுகிறார்.

தமிழில் பிரார்த்தனை நூலொன்று இருக்க வேண்டுமென்ற அருட்தந்தை ஹென்றிகுயஸின் முயற்சியின் பெறுபேறாக பிரான்ஸிஸ் சேவியர் போர்த்துக்கேய மொழியில் எழுதிய "டொக்ரினா கிறிஸ்தம்" என்ற நூலின் மொழி பெயர்ப்பே இந்த நூலாகும்.

1556 இல் போர்த்துக்கல்லிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தி கொல்லத்தில் இந்த நூல் அச்சிடப்பட்டது.இந்திய மொழியில் பிரசுரிக்கப்பட்ட முதலாவது நூல் என புலவர் ராஜூ மேலும் சுட்டிக்காட்டுகிறார்.

"தம்பிரான் வணக்கம்" நூலுக்கு முன்னர் தமிழ் நூலொன்று பிரசுரிக்கப்பட்டிருந்ததாயினும் அது போர்த்துக்கேய எழுத்துருவிலேயே இருந்தது.

## இனத்துவேசம் பேசிய பொலிஸ் மந்திரி தண்டனை பெற்றார்

பிரெஞ்சிய உள்துறை அமைச்சரான Brice Hortefeux ஓர் அல்ஜீரிய இளைஞர் தொடர்பாக இனத்துவேச வார்த்தைகள் கூறியமை மெய்ப்பிக்கப்பட்டதனால் அபராதம் செலுத்துவதற்கு தீர்ப்பளிக்கப்பட்டார்.

வெளிநாட்டவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு இறுக்கமான பல கெடுபிடிகளை அமுல்படுத்திய மேற்படி அமைச்சர் Landes எனும் ஊரில் இடம்பெற்ற கூட்டத்தில் அமின் எனப்படும் அராபியருடன் கைகுலுக்கிப் பேசும்போது, ஒருவர் என்றால் பிரச்சனை இல்லை. பலபேர் என்றால்தான் பிரச்சனை என அந்த இளைஞரின் சமூகம் குறித்து வார்த்தைகளை விட்டதனால், இனத்துவேஷத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தும் MRAP அமைப்பு அமைச்சர் மீது நீதிமன்றில் வழக்குத்தொடர்ந்திருந்தது. வழக்கை விசாரித்த நீதிமன்றம் உள்துறை அமைச்சர் அமிருக்கு நஷ்டஈடாக 2000 யூரோவும், அபராதமாக 750 யூரோவும், MRAP க்கு 3588 யூரோவும் வழக்குத்தொகையாகச் செலுத்த வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கியது.

உள்துறை அமைச்சர் ஜனாதிபதி நிக்கொலா சார்க்கோஷியின் முப்பது ஆண்டுகால குடும்ப நண்பர் ஆவார்.

(எஸ்.எஸ்)





லாச்சப்பலில்

சங்கீதா அச்சகம்

01 44 72 08 94




# Nutella

## உடல் நலத்துக்குக் கேடு எச்சரிக்கிறது ஐரோப்பிய யூனியன்!



குழந்தைகள் முதல் பெரியவர் வரை இந்தப்பெயரைக் கேட்டாலே வாயில் எச்சில் ஊறாதவர்களே இருக்கமுடியாது. அதுதான் nutella. பாண்-பிரெஞ்சுத் தோசை என அனைத்திலும் சேர்த்து உண்ணுவதில் ஓர் அலாதி இன்பம். இதற்கும் வந்தது வேட்டு. ஐரோப்பிய யூனியன் தனது யூன் மாத ஆய்வறிக்கையில் nutella, அளவுக்கு அதிகமான சர்க்கரையும் - அதிகளவு கொழுப்பும் நிறைந்த palme oil லும் கொண்டுள்ள தாகவும்- இதனை உண்பதன் காரணமாக அளவுக்கதிகமாக உடல் பருமனாவதுடன் கொழுப்புத்தன்மையும் அதிகமாவதாக எச்சரித்துள்ளது. nutella தனது விளம்பரங்களில் உடல்பருப்பதற்கான எச்சரிக்கை அறிவித்தலையும் வெளியிட வேண்டுமெனவும் எச்சரித்துள்ளது. உடல் பருப்பதற்கான கோட்பாடுகளைக் கொண்டஉணவு எனவும் தெரிவித்துள்ளது. கொழுப்பு அதிகரித்தால்- உடல் பருமனாகும்- உடல் பருத்தால்-இருதயநோய் வரும்-இருதயநோய் வந்தால்...' எதற்கும் நாவைக் கட்டுப்படுத்தப் பழகிக்கொள்ளுங்கள்.

## வேண்டாம் என்று சொன்னால் கேட்கவா போகிறீர்கள்!

சர்வதேச ரீதியாக சிகரெட் பாவனையால் பாதிக்கப்படுபவர்கள் அதிகமாகி வருவதாக ஆய்வாளர்களால் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிலும் 2004இல் 20 வயதுடையவர்கள் 1.5 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இது 2030இல் 2.5 மில்லியோனாக அதிகரிக்குமென்றும் l'Organisation Mondiale de Sante (OMS) தனது 2009 அறிக்கையில் தெரிவித்துள்ளது. பிரான்ஸிலுள்ள ஆய்வுமையங்கள் தங்கள் ஆய்வறிக்கையில் நுரையீரல் புற்றுநோயால் பலர் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றது. சிகரெட் லைற் இல் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய Nicotine வேதிப்பொருள் குறைவு என்ற கருத்து உள்ள போதிலும் அது தவறான கருத்து என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் புகைபிடிப்பவரின் அருகிலுள்ளவர்களும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வருகிறது முப்பரிமாணத்தில் வீடியோ விளையாட்டுகள்




குழந்தைகள் முதல் பெரியவர் வரை எங்கு பார்த்தாலும் ஓய்வு நேரங்களில் கையில் ஏதாவதொரு வீடியோ விளையாட்டுப் பொருளைக் காண முடிகிறது. நாள்முழுவதும் அதனுள் புதைந்து போகின்றவர்களும் உண்டு. அப்படியானவர்களின் எதிர்பார்ப்புகளைத் திருப்திப்படுத்த முப்பரிமாண விளையாட்டுகள் வெளிவரவுள்ளன. Electronic entertainment expo பொருட்காட்சி அமெரிக்காவின் Los Angeles நகரில் நடைபெற்ற போது இவ்விளையாட்டுக்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த விளையாட்டுகளை Microsoft மற்றும் Sony நிறுவனங்களும் வெளியிட்டுள்ளன. முப்பரிமாணக் காட்சிகளைப்பார்ப்பதற்கான கண்ணாடிகளை அணியாமலே இந்த வகை விளையாட்டுகளை விளையாட முடியும். Disney studios மற்றும் Dreamworks நிறுவனங்கள் Nintendo உடன் இணைந்து நவீன விளையாட்டுகளை வெளியிடவுள்ளன. Microsoft நிறுவனம் தனது Xbox விளையாட்டுகளின் 8 விதமான முப்பரிமாண விளையாட்டுகளை நவம்பர் மாதம் சர்வதேசரீதியாக வெளியிடுகின்றது. அதேவேளை Sony நிறுவனம் தனது பிரபல தயாரிப்பான Playstation இற்கான விளையாட்டுகளை செப்ரெம்பர் மாதம் யப்பான் இலும் ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளிலும் வெளியிடவுள்ளது.


## இலவச தியான பயிற்சி

### தியான பயிற்சியின் நன்மைகள்

- கோபம், வெறுப்பு, மனசோர்வு, மன அழுத்தம் போன்றவை மன அமைதியாய் மாறுகின்றன.
- தேவையற்ற தீய பழக்க வழக்க வழக்கங்களை மாற்றுவதற்கு நம்மிடம் மனோபலமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கிறது.
- பரந்த சிந்தனை, ஞாபகசக்தி போன்றவை வளர்கின்றன.
- ஆக்கபூர்வ எண்ணங்களால், கவலைகளை துறந்து மகிழ்ச்சியாக வாழலாம்
- எண்ணம், சொல், செயலின ஒருமைப்பாட்டின் வழி, செயல்திறன் அதிகரித்து வாழ்வில் முன்னேற்றம் ஏற்படுகிறது.


தமிழில் இலவச இராஜ யோக தியானப்பயிற்சி வழங்கப்படுகிறது

தொடர்புக்கு : பிரம்மாகுமாரிகள் பாரீஸ் நிலையம்

74, Rue Orfila, 75020 Paris. (M°: Gambetta - line3) தொ.எண் : 06 18 89 05 21

Pub




எனது நண்பனின் மகனுக்கு வயது பத்து. குழந்தையிலிருந்தே அவனை எனக்குத்தெரியும். நல்ல சுறுசுறுப்பான சுட்டிப்பயல். எப்போதும் கலகலப்பாக துருதுருவென்று ஓடித்திரிவான். ஆனால் அண்மைய சில காலங்களாக அவன் பழைய மாதிரி இல்லை. அவனில் சோர்வு. சின்னச்சின்ன விசயங்களுக்கெல்லாம் எரிந்துவிழுகிறான். மற்றைய பிள்ளைகளுடன் விளையாடத் தயங்குகிறான். அவன் மகிழ்ச்சியாய் இல்லை. பெற்றோரைக்கேட்டால் அவன் படிப்பில் கவனம். வகுப்பில் அவன்தான் கெட்டிக்காரன். கஸ்ரப்பட்டுப் படிக்கிறான். அதனால் தான் இப்படி மாறிப்போனான் என்று காரணம் சொல்கிறார்கள். இப்ப இப்படி கஸ்டப்பட்டால் தானே பின்னுக்கு நல்லாய் இருக்கலாம் என்று அதற்கு அழுத்தமும் கொடுக்கிறார்கள்.

எனக்கென்னவோ அது சாதாரணசோர்வாய் தெரியவில்லை. நிலைமையை ஆழ அலசியபோது எனக்கு இன்னொரு உண்மை துலங்கியது. பத்துவயதுக் குழந்தைக்கு அளவுக்கதிமான சுமையை பெற்றோர் திணிக்கிறார்கள் என்பதே அது. இதை நான் சொன்னால் அவர்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. என் மீது கோபம் அல்லது நான் பொறாமைகொள்கிறேன் என்ற குற்றச்சாட்டையும் அவர்கள் வைக்கக்கூடும்.

குழந்தை பாடசாலை நேரம் முடிய ரியூசன், ரியூசன் முடிய மியூசிக் கிளாஸ். இங்கிலீஸ் கிளாஸ். அதற்குள் கராட்டி கிளாஸ். மேலைத்தேய கீழைத்தேய கலைகள் இரண்டையும் பிள்ளையும் கற்றுத்தேறவேண்டும் என்பது பெற்றோரின் ஆசை. வகுப்பில் பிள்ளை முதலாவதாயும் வரவேண்டும். பிள்ளையைப் போட்டு வறுத்தெடுக்கிறார்கள். தன்னுடைய பிஞ்சுப்பருவத்தில் அந்த வயதுக்குரிய விளையாட்டுகள் குறும்புகள் எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு குழந்தை புத்தகப்பையுடன் அலைகிறது. பிள்ளையப்பற்றி பெருமைகொள்வதில் பெற்றோருக்குப் பெருமை. ஆனால் குழந்தை தனது எதிர்காலத்தையே இழக்கப்போகிறது என்ற கவலை பெற்றோருக்கு கிடையாது. அதை அவர்களால் உணர்ந்து கொள்ளமுடியவில்லை என்பதும் எனக்குப் புரிகிறது.

பிள்ளை படிப்போடு நின்று விடாது கலை மற்றும் விளையாட்டுக்களிலும் ஆர்வம் செலுத்துவது பிள்ளையின் உளநலத்துக்கு ஆரோக்கியமானது. அது பிள்ளையை சரியான வழியில் செப்பனிடவும் செய்யும். ஆனால் அதேவேளை அளவோடு இருக்கவேண்டும். எங்களுடைய விருப்புவெறுப்புகளை குழந்தைகள் மேல் திணிக்கக்கூடாது. குழந்தைகளின் விருப்பறிந்து நாம் நெறிப்படுத்தவேண்டும். இல்லையேல் பாரதுாரமான பின்விளைவுகளை பிள்ளைகளுக்கு நாம் ஏற்படுத்திக்கொடுத்தவர்களாவோம்.

நாங்கள் பிள்ளைகளில் அக்கறையுள்ளவர்கள்தான். சந்தேகமில்லை. எங்கள் அக்கறை சரியானதா என்று அலசிப்பார்க்கும் சக்தி பலவேளைகளில் எம்மிடம் இருப்பதில்லை. எங்கள் குழந்தைகள் மகிழ்ச்சியாக உற்சாகமாக இருக்கிறார்களா என்பதை கவனித்துக்கொள்ளுதல் அவசியம்.

- ஆர். சதானந்தா



## 10 நாட்களுக்கு ஒரு பெண் தனது கணவரால் கொல்லப்படுகின்றார்.

இது நடப்பது வேறெங்கேயுமல்ல. பிரான்சில்தான். பிரான்சில் திருமணம் செய்து தம்பதியினராக வாழ்ந்து வருபவர்களிடையே ஏற்படும் வன்முறைகள் பெருகி வருகின்றன. சிலவேளைகளில் கொலைகளில் கூட போய் முடிகின்றன. இவற்றை கட்டுப்படுத்தும் எண்ணத்துடன் புதிய சட்ட வரையறைகள் பிரெஞ்சு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. அரசின் தகவலின்படி பிரான்சில் 2008ம் ஆண்டில் 156 பெண்கள் தங்கள் கணவரால் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது 10.5 நாட்களுக்கு ஒரு பெண் தனது கணவரால் பிரான்சில் கொல்லப்படுகின்றார். பிரான்சில் இடம்பெறும் கொலைகளில் ஐந்தில் ஒன்று தம்பதியினரிடையே ஏற்படுகின்ற தகராறினாலேயே நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாகவே குடும்ப வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவே பிரான்சில் சட்டமூலம் ஆனி இறுதியில் கொண்டு வரப்பட்டுள்ளது. கணவன், மனைவி அல்லது பிள்ளைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக இந்த செயற்பாடுகள் ஏற்படுத்தப்படுகின்றது. இவற்றுள் உளரீதியான பாதிப்புக்கள் ஏற்படுவதும் அடங்கும். அத்துடன் வன்முறை தம்பதியினருக்கு இடையே உள்ள தூரத்தைப் பேணுமுகமாக மூன்று வருடங்களிற்கு இலத்திரனியலில் வளையம் ஒன்றை மணிக்கட்டில் பொருத்தவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறான ஏற்பாடுகளின் மூலம் மணவாழ்வில் ஈடுபட்டுள்ளவர்களின் வன்முறைகளை கட்டுப்படுத்த அரசு முயல்கின்றது.



## BAC பரீட்சையில் 31 மாணவர்களுக்கு 20/20

பிரான்சில் நடைபெறும்முக்கிய பரீட்சைகளில் ஒன்றான BAC இன் முடிவுகள் 6.7.2010 இல் வெளியானது. பிரெஞ்சு மன்னன் நெப்போலியனால் 1808 இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பரீட்சை 202 வது ஆண்டாக 2010ல் நடைபெற்றது. இதில்நாடு முழுவதிருமிருந்து **642 635** மாணவர்கள் தோற்றினர். அதில் 511 149 மாணவர்கள் சித்தியெய்தினர். இது கடந்த ஆண்டைவிட 3.6வீதம் விழுக்காடு ஆகும். இப்பரீட்சையில் 31 மாணவர்கள்20/20 என அதிவிசேட பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.


**கிருஷ்ணா அச்சகம்**

**73, Rue Doudeauville - 75018 Paris**
**M°: Château Rouge Tél.: 01 42 51 29 92**



## நடுவர் என்றாலே நடுக்கம் தான்!

பெரிய பெரிய ஸ்டார் வீரர்களே கூட நடுவர்களிடம் அடக்கியே வாசிக்க முடியும்.

கால்பந்துப் போட்டிகளின் போது முரட்டு ஆட்டம் ஆடினாலோ அல்லது தவறாக நடந்து கொண்டாலோ இரண்டு முறை மஞ்சள் கார்டு காட்டுவார் நடுவர். அடுத்த முறை தவறு செய்தால் ரெட் கார்டு காட்டி வெளியேற்றி விடுவார்.

நடந்து முடிந்த உலகக்கோப்பை இறுதி ஆட்டத்தின்போது நெதர்லாந்துக்கு ஒரு ரெட் கார்டு காட்டப்பட்டது. இரு அணிகளுக்கும் மொத்தமாக 13 மஞ்சள் கார்டு காட்டி புதிய சாதனை படைத்து விட்டார் நடுவர் வெப்.

நெதர்லாந்துக்கு மட்டும் 7 மஞ்சள் கார்டு. ஸ்பெயினுக்கு 5 கார்ட்.

உலகக் கோப்பை இறுதிப் போட்டியின்போது நடுவர் ஹோவர்ட் வெப் மகா ஸ்டிரிக்டாக நடந்து கொண்டார். இதனால் ஒரு சிவப்பு கார்டும், 13 மஞ்சள் கார்டையும் காட்டி இரு அணியினரையும் டென்ஷனாக்கி விட்டார்.

கால்பந்துப் போட்டிகளில் எம்மாம் பெரிய வீரராக இருந்தாலும் நடுவர் முன்பு குட்டி சுண்டெலி போலத்தான் நடக்க முடியும். வீராப்பு காட்டினால் தூக்கி விடுவார் நடுவர் கையை -கார்டுடன்.




## நஷ்டஈடு கேட்கிறார் டொமெனிக்!

பிரெஞ்சு தெரிவுநராக இருந்த ரெமொன்ட் டொமெனிக் FFF இற்கு எதிராக நஷ்டஈடு வழக்குத் தொடர்ந்திருக்கிறார். தனது பதவிக்காலம் (31.07.2010) முடியும் முன்னரே பிறிதொரு தெரிவுநரை (Laurent Blanc) தெரிவு செய்தமைக்கு எதிராக 2மில்லியன் யூரோவை தனக்கு தரவேண்டும் என அவர் கோரியுள்ளார்.

## சாதனையாளர் முரளி ஓய்வு பெறுகிறார்.



இலங்கையின் நட்சத்திர கிரிக்கற் வீரர் முத்தையா முரளிதரன் டெஸ்ற் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுகிறார். டெஸ்ற் அரங்கில் 800 விக்கற்றுகளையும் ஒருநாள் அரங்கில் 515 விக்கற்றுகளையம் சாய்த்து உலகஅரங்கின் சாதனையாளராக திகழ்கிறார். கிரிக்கெற் அரங்கில் 19ஆண்டுகள் விளையாடிய முரளி இலங்கை அணியின் பல முக்கியவெற்றிகளுக்கு பக்கபலமாக திகழ்ந்திருக்கிறார்

# விளையாட்டுச் செய்திகள்



## ரொனால்டோவின் சாதனை முறியடிக்கப்படுமா?

உலகக் கால்பந்து ரசிகர்களின் மனம் கவர்ந்த ஹீரோக்களில் ஒருவரான பிரேசிலின் ரொனால்டோ உலகக் கோப்பைக் கால்பந்து வரலாற்றில் அதிக கோல்களை அடித்த ஒரே வீரராக திகழ்கிறார்.

உலகக்கோப்பைப் போட்டிகளில் ரொனால்டோ 15 கோல்களை அடித்து சாதனை படைத்துள்ளார். இந்த சாதனை இதுவரை முறியடிக்கப்படாமல் உள்ளது.

ஆனால் தென் ஆப்பிரிக்காவில் நடந்த தொடரில் ஜெர்மனியின் மிரஸ்லோவ் குளோஸ் இந்த சாதனையை முறியடிக்கும் வாய்ப்புகள் உருவானது. ஆனால் முடியவில்லை. 14 கோல்களை மட்டுமே அடிக்க முடிந்தது குளோஸால்

உருகுவேக்கும், ஜெர்மனிக்கும் இடையே நடந்த 3வது இடத்துக்கான போட்டியில் முதுகு வலி காரணமாக குளோஸ் இடம் பெறவில்லை. அதில் விளையாடி, 2 கோல்கள் அடித்திருந்தால் ரொனால்டோவின் சாதனையை முறியடித்திருக்க முடியும்.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள ரொனால்டோ, 14 கோல்களை அடிப்பது என்பது மிகப் பெரிய சாதனை. அதை படைத்துள்ள குளோஸை நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

உருகுவேக்கு எதிரான போட்டியில் அவர் விளையாடாமல் போனது துரதிஷ்டவசமானது.

உலகக் கோப்பைப் போட்டிகளில் நான் ஒரு வரலாறு படைத்தேன். அதை முறியடிக்க முயன்றார் குளோஸ். இப்போது இனி வரும் வீரர்கள் அதை முறியடிக்க முயல்வார்கள் என நம்புகிறேன் என்றார் ரொனால்டோ.



## டேவிட் ஷெப்பர்ட் மரணம்

புகழ் பெற்ற இங்கிலாந்து நாட்டின் கிரிக்கெட் நடுவர் டேவிட் ஷெப்பர்ட் இங்கிலாந்தில் மரணமடைந்தார். அவருக்கு வயது 68. ஷெப்பர்டின் மனைவி ஜென்னி . இவரை கடந்த ஆண்டுதான் ஷெப்பர்ட் மணந்து கொண்டார் .

ஷெப் என்று அனைவராலும் அழைக்கப்பட்ட ஷெப்பர்ட் 92 டெஸ்ட் போட்டிகளுக்கும், 172 ஒரு நாள் போட்டிகளுக்கும் நடுவராகப் பணியாற்றியுள்ளார். இதில் 3 உலகக் கோப்பை இறுதிப் போட்டிகளும் அடக்கம்.

டேவிட் ஷெப்பர்டின் நெருங்கிய நண்பரும், பிரபல நடுவருமான டிக்கி பேர்ட், ஷெப்பர்டின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

டேவிட் ஷெப்பர்ட், கிளவுசஸ்டர்ஷயர் அணிக்காக முதன் முதலாக 1965ம் ஆண்டு ஆடி கிரிக்கெட் உலகுக்குள் நுழைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு : ஜெகன்

## காவல்துறை சீருடையில் கொள்ளை

*02/06/2010*

யூன் முதலாம் திகதி மதியம் காவல்துறை சீருடையில் வந்தவர்களால் நகைக்கடை கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் லியோன் என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது. அவுடி (Audi) ரக வாகனங்களில் காவல்துறை பயன்படுத்தும் அவசர தேவைக்கான விளக்கு பொருத்தப்பட்டு அவசரதேவைக்கான ஒலியும் எழுப்பியபடி வந்து இறங்கிய 10 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் குறித்த நகைக்கடை உரிமையாளரை துப்பாக்கி முனையில் மிரட்டி தாங்கள் காவல்துறையினர் எனக் கூறி நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர். அவசர சேவை ஒலியை எழுப்பிய படி வந்ததனால் நகைக்கடைக்கு அண்மையில் நின்றவர்கள் காவல் துறையினர் என நினைத்து இந்த விடயத்தை பெரிது படுத்தவில்லை. கொள்ளையடித்து சென்ற பின்னரே உண்மை நிலை தெரிய வந்துள்ளது. லியோன் (Lyon) நகரத்தின் முன்னணி நகைத் தயாரிப்பு நிறுவனமான இந்த நகைக்கடையில் கொள்ளை நடந்த விதம் காவல்துறையினரையும் பொதுமக்களையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

## இப்படியும் நடந்தது!

Dylan என்ற 43 வயதேயான கட்டிடத்தொழிலாளி. அந்த மனிதருக்கு ஏன் தான் இப்படி ஒரு விபரீத எண்ணம் வந்ததோ?
ஏழு வயதான தனது மகனை பிறந்த நாள் முதல் சிறிய மூடிய இருண்டஅறையொன்றிலே வைத்துப்பூட்டி கொடுமைப்படுத்தியிருக்கிறார்.
ஏழு வயதாகியும் அவனை பாடசாலைக்கு அனுப்பவில்லை. சிறுவனுக்கு சுகவீனம் ஏற்பட்டால்கூட மருத்துவரிடம் கொண்டு செல்வதில்லை. சரியாக உணவு கொடுப்பதில்லை. அடி, உதை என்று சித்திரவதைகளைத்தான் சிறுவன் அனுபவித்தான். படுப்பதற்கு மட்டும் மெத்தைபோட்ட ஓர் இரும்புக்கட்டில். மலம் கூட சிலவேளைகளில் அப்படியே கழித்திருக்கிறான். பயத்தினால் தனக்கு அப்படி நிகழ்வதாக விசாரணைகளின் போது அவன் தெரிவித்தான்.
தாயாருக்கும், பாட்டிக்கும் இவ்விடயம் தெரிந்தும் அவர்கள் பேசாமலே இருந்திருக்கிறார்கள். மருத்துவரிடமோ, பாடசாலைக்கோ அனுப்பாதற்கு காரணம், அவன் தான் துன்புறுத்தப்படுவதை வெளியே சொல்லிவிடுவான் என்ற பயமே என தாயார் விசாரணைகளின் போது தெரிவித்திருக்கிறார். இந்த குடியிருப்பின் மேல்மாடியில் வசிப்பவர்கூட இவ்விடயத்தை அறிந்திருந்தும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இச்சம்பவம் நடந்தது வேறெங்குமல்ல, பிரான்சிலுள்ள Millau (Aveyron) என்ற இடத்திலேதான். 2009 ஆம் ஆண்டு நடந்த சம்பவத்திற்கான தீர்ப்பு இந்த யூன்மாதம் வழங்கப்பட்டது.
சிறுவனின் தகப்பனுக்கு 4 வருடங்கள் சிறைத்தண்டனையும் அதில் ஒரு வருடம் ஒத்திவைக்கப்பட்ட தண்டனை. தாயாருக்கு மூன்று வருட சிறைத்தண்டனை அதில் 18 மாதங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை. அச்சிறுவனின் பாட்டிக்கு (அம்மம்மா) ஒரு வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் அவர்களின் வீட்டின் மேல் வசிப்பவருக்கு 6 மாதகால ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

- பிறேமன்

## வதிவிடஉரிமையற்றோர் போராட்டம்

வதிவிட உரிமை மறுக்கப்பட்டவர்களால் மேற்கொள்ளப்பட்டுவந்த மறியல் முற்றுகைப் போராட்டம் யூன் 3ம் திகதி வியாழன் காலை காவல்துறையினரால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. பிரான்ஸில் வதிவிட உரிமை மறுக்கப்பட்டவர்கள் தமக்கு வேலை வாய்ப்பு வழங்குமாறும் வதிவிட உரிமை வழங்குமாறும் கோரிக்கைகளை முன்வைத்து மே 27ம் திகதி முதல் பாரிஸின் பிளேஸ்-டி-லா-பஸ்ரில் (Place-de-la-Bastille) என்ற இடத்தில் முற்றுகைப் போராட்டம் நடத்தி வந்தனர். சுற்றுலா பிரயாணிகள் அதிகம் வந்து செல்லும் இவ்விடத்தில் கூடாரங்கள் அமைத்தும் பதாகைகளை வைத்தும் போராட்டம் நடத்தியதால் சராசரி வாழ்வு நிலை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. பாரீஸ் மாநகரசபை காவல்துறை ஆணையாளர் நேரடியாக சம்பவ இடத்திற்கு சென்று பேச்சு நடத்திய போதிலும் போராட்டம் தொடர்ந்தது. வியாழன் காலை வரை காவல் துறையினரால் கெடு விடுக்கப்பட்ட நிலையில் குறித்த போராட்டங்கள் நடாத்தியோர் அவ் விடத்தை விட்டு வெளியேற மறுத்துவிட்டனர். இறுதியாக அதிரடி காவல் துறையினர் வரவழைக்கப்பட்டு பலாத்காரமான முறையில் அனைவரும் அவ்விடத்தை விட்டு வெளியேற்றப் பட்டுள்ளனர். வதிவிடவுரிமை நிராகரிக்கப்பட்டவர்கள் மே மாதம் பாரிஸ் 18 இல் உள்ள தேவாலயத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## உலகக்கோப்பை கால்ப்பந்து வெற்றியாளர்கள்

*1930* : **உருகுவே** - ஆர்ஜென்ரீனா (4-2)
*1934* : **இத்தாலி** - செக்கோஸ்லாவாக்கியா (2-1)
*1938* : **இத்தாலி** - ஹங்கேரி (4-2)
*1950* : **உருகுவே** - பிறேசில் (2-1)
*1954* : **மேற்கு ஜேர்மனி** - ஹங்கேரி (3-2)
*1958* : **பிறேசில்** - சுவீடன் (5-2)
*1962* : **பிறேசில்** - செக்கோஸ்லாவாக்கியா (3-1)
*1966* : **இங்கிலாந்து** - மேற்கு ஜேர்மனி (4-2 a.p)
*1970* : **பிறேசில்** - இத்தாலி (4-1)
*1974* : **மேற்கு ஜேர்மனி** - நெதர்லாந்து (2-1)
*1978* : **ஆர்ஜென்ரீனா** - நெதர்லாந்து(3-1 a.p)
*1982* : **இத்தாலி** - மேற்கு ஜேர்மனி (3-1)
*1986* : **ஆர்ஜென்ரீனா** - மேற்கு ஜேர்மனி (3-1)
*1990* : **ஜேர்மனி** - ஆர்ஜென்ரீனா (1-0)
*1994* : **பிறேசில்** - இத்தாலி (0-0, 3-2 t.a.b)
*1998* : **பிரான்ஸ்** - பிறேசில் (3-0)
*2002* : **பிறேசில்** - ஜேர்மனி(2-0)
*2006* : **இத்தாலி** - பிரான்ஸ் (1-1, 5-3 t.a.b)
*2010* : **ஸ்பெயின்** - நெதர்லாந்து (1-0 a.p)




### 3S — 3D நடைமுறையில் பிரெஞ்சியரின் விடுமுறை

பெரும்பாலான பிரெஞ்சியர்களுக்கு ஜுலை - ஒகஸ்ற் கோடைகால விடுமுறையே உண்மையானதும் மகிழ்ச்சியானதுமாக அமைகிறது. 11 மாதகால வேலை, மனஉளைச்சல், விரக்தி, முயற்சி, அலைச்சல் முதலானவற்றில் கழிந்த வாழ்க்கை ஒரு மாதகாலம் ஓய்வு, நல்ல சாப்பாடு, நீராடல், நித்திரை, தோல் மண்ணிறமாதல், உல்லாசக்களிப்பு, கொண்டாட்டம் ஆகியவற்றில் கழிக்கப்படுகிறது.

விடுமுறையில் செல்லாதோரின் காலக்கழிப்பு தூங்குதலிலும், எதுவும் செய்யாததிலும் கழிகிறது.

பிரெஞ்சுப் பண்பாட்டியலில் விடுமுறைக்கழிப்பு ஓர் அம்சமாக இடம்பெறுகிறது.

பிரெஞ்சியர்களின் கோடை விடுமுறை பொதுவாக **3S** எனும் சூத்திரத்தில் கழிகிறது. அதாவது Soleil - **சூரியன்**, Sable - **கடற்கரைமணல்** , Sex - **பாலுறவு** ,.ஆகியவற்றில் காலம் கழிக்கப்படுகிறது. ஆயினும் இந்நாட்களில் தம்மை முன்னேற்றிக் கொள்வதற்கான முயற்சிகளில் விடுமுறைக்காலத்தைக் கழிப்பவர்களின் எண்ணிக்கை ஆர்முடுகி வருகிறது. இவ்வகையான முயற்சியும் **3D** எனும் சூத்திரத்தில் பொருந்துகிறது. அதாவது
**Détente** - தணித்தல்
**Divertissement** – **பொழுதுபோக்கு கேளிக்கை** ,
**Développement** – **முன்னேற்றம்**

# தேன்கூடு

பேராசிரியர் ச. சச்சிதானந்தம்


## பதிவுகள்

### பக்கலோரியாவில் 20/20 எடுத்தவர்களுக்கு அமைச்சர் பதக்கம் வழங்கல்

ஜுன் நடுப்பகுதியில் நடந்த பன்னிரண்டாம் வகுப்பான தேர்மினலின் சான்றிதழ் தேர்வு முடிவுகள் ஜுலை முதற் கிழமை வெளியாயின. பிரான்ஸ் முழுவதும் தோற்றிய 624 235 பரீட்சார்த்திகளில் 31 பேர் 20/ 20 புள்ளிகள் எடுத்து முன்னிலை பெற்றனர். இம்மாணவர்களில் 54 வீதமானோர் Bac - générale இலும், 26 வீதமானோர் Bac - technologie இலும், 20 வீதமானோர் Bac – prof இலும் அடங்குவர். இந்த Bac இன் போது 4874 விடயங்கள் எடுத்தாளப்பட்டன. 162000 ஆசிரியர்கள் கடமையாற்றினார்கள்.

கல்வி அமைச்சர் Luc Chatel அவர்களால் 110 rue de Grenelle, Paris இல் அமைந்துள்ள கல்விஅமைச்சகத்தில் ஜுலை 15 அன்று இடம்பெற்ற பதக்கமளிக்கும் கௌரவிப்பு விழாவில் 31 மாணவர்களில் 17 பேர் மட்டுமே கலந்துகொண்டனர். மிகுதி 14 பேரும் ஏலவே விடுமுறையில் சென்றுவிட்டதனால் விழாவில் பதக்கம் பெறும் வாய்ப்பை நழுவவிட்டனர்.

13 ஆம் நூற்றாண்டிலிருந்து நடாத்தப்பெறும் பக்கலோரியா Baccalauréat சான்றிதழ் பல்கலைக்கழகக் கல்வியை மேற்கொள்வதற்கும் தொழில்வாய்ப்புக்கான திறவுகோலாகவும் திகழுகிறது. Baccalaureat ஆனது Bac - ப(ா)க் என குறுக்கமாக வழங்கப்படுகிறது. Bacca - lauri என்பதே Baccalauréat என்றானது. அலரிக் கிரீடம் என்பதே இதன் பொருள். ‘துவந்தத்தில் ’, போட்டியில் வெற்றிபெறுபவருக்கு அலரிக்கிரீடம் சூடுவது ரோமானியரின் மரபு.



### ஜுலை, ஒகஸ்ற் மாதங்களின் பிறப்பும் சிறப்பும்

இப்போது கணக்கில் கொள்ளப்படுகின்ற ரோமானிய கலண்டர் முறையில் 12 மாதங்கள் உள்ளன. மாதங்களில் பல ரோமானியக் கடவுள்கள் பெயர்களாக அமைய ஜனவரி என்பது **Janus** எனும் கடவுளையும், மார்ச் என்பது **Mars** கடவுளையும் குறிக்கின்றன. இவ்விரண்டு மாதங்களும் ரோமானியப் பேரரசர்களை நினைவூட்டுகின்றன. மிகுதியானவை முறையே ஏழாவது - sept’, எட்டாவது - oct’, ஒன்பதாவது - novem’ , பத்தாவது – decem’ மாதங்களைக் கணக்குக் காட்டி நிற்கக் காணலாம்.

ரோமானியரின் கால ஆண்டில், ஆரம்பத்தில் பத்து மாதங்களே இருந்தன. பின்னர் ஜுலை என்பது **Julius Cesar** ஜுலியஸ் சீசரையும், ஒகஸ்ற் என்பது **August Cesar** ஒகஸ்ற் சீசரையும் நினைவில் நிலைநிறுத்துவதற்காக **Gregoire** என்பவரால் புதிய இரு மாதங்கள் செருகப்பட்டு பன்னிரண்டு மாதங்கள் ஆக ரோமானிய ஆண்டு மீளமாற்றம் செய்யப்பட்டது... இவ்விரு மாதங்களையும் சிறப்பானவை ஆக்க பெப்ரவரியிலிருந்து தலா ஒரு நாள் எடுக்கப்பட்டு 30 நாட்கள் கொண்ட மாதங்கள் 31 நாட்கள் ஆக நீட்டப்பட கடன்கொடுத்த பெப்ரவரி 28 நாட்கள் கொண்டதாக மெலிந்தது. புதுமாதங்கள் இடையில் புகுத்தப்பட்டதன் விளைவாக, சப்த மாதமாக -september இருந்தது ஒன்பதாவதாகவும், தசாம்ப மாதமாக- december இருந்தது பன்னிரண்டாவதாகவும் ஆயின.

### சிரிப்பதை பொய் என உள்வாங்கிக் கொள்ள முடியும் !



மனிதரின் வாழ்க்கை வட்டத்தில் வந்து போகும் கள்ளச்சிரிப்பு, கபடச்சிரிப்பு, நக்கல்சிரிப்பு, நவுட்டல் சிரிப்பு, மஞ்சள் சிரிப்பு போன்ற பலசிரிப்புகளில் பொய்ச்சிரிப்பு முக்கியமான இடத்தைப் பிடிக்கிறது.

ஒருவர் சிரிக்கும் போது, சிரிப்பவரின் வாயின் இடது பகுதியிலிருந்து தோன்றினாலோ அல்லது அவரின் கண்மடல்கள் சுருங்காமல் சிரித்தாலோ’ அச்சிரிப்பு பொய்ச்சிரிப்பு என அறிந்து கொள்ளலாம்.



## மாதிரி உருவங்கள் விற்பனை வலைப்பின்னலை முறியடிக்க பொலீசார் முயற்சி!

ஈபில் கோபுர பகுதிகளில் மாதிரி உருவங்களை விற்பனை செய்து வந்த வியாபார வலைப்பின்னல் அமைப்பை முறியடிக்க யூன் மாத இறுதியில் முற்றுகை ஒன்றை பிரெஞ்சுப்பொலீசார் நடாத்தி உள்ளனர். இதன் போது 200 இற்கும் மேற்பட்ட பொலீசார் பாரிஸ் 13 இல் அமைந்துள்ள வேலைசெய்வோர் விடுதி Foyer ஒன்றையும் பாரிஸ் 3 இல் அமைந்துள்ள ஞாபகசின்னங்களை விற்கும் கடைகள் சிலவற்றையும் ஒபேர்வில்லியர்சில் அமைந்துள்ள இரண்டு மொத்த வியாபாரக் கடைகளையும் சோதனையிட்டுள்ளனர்.

பொலீசாரின் நடவடிக்கையின் போது 10 கனமீற்ரர்களுக்கும் கூடுதலான வெள்ளி நிற பொன்நிறமான மாதிரி ஈபில்-கோபுரங்கள் கைப்பற்றப்பட்டன. அத்துடன் 20.000 யூரோக்கள் நாணயத்தாள்களும் சில்லறைகளும் கைப்பற்றப்பட்டன. இத் தேடுதல் நடவடிக்கையின் போது 39 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் சீன, மற்றும் செனகல் நாட்டவர்கள்.

ஜனவரி மாதத்திலிருந்து பலருடைய தொலைபேசி உரையாடல்கள் கண்காணிக்கப்பட்ட பின்னரே பொலீசார் இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறான சட்டவிரோத விற்பனைகள் ஈபிள் கோபுரப் பகுதியில் மாத்திரம் இல்லாமல் டிஸ்னிலாண்ட், வேர்சாய் மற்றும் மொன்மார்த் போன்ற பகுதிகளிலும் இடம் பெற்றுள்ளன என்று பாரிஸின் பாதுகாப்பு இயக்குனர் அலன் கார்டேர் தெரிவித்துள்ளார்.

மாதிரி ஈபிள் கோபுரங்கள் மணிக்கூடுகள் மற்றும் உல்லாசப்பயணிகளை கவரக்கூடிய வேறு சின்னங்களையும் சீனாவில் உற்பத்தி செய்யப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈபிள் கோபுர பகுதியில் 300 பேர் வரையான விற்பனையாளர்கள் ஈடுபடுகின்றனர் என்றும் சராசரி மாத வருமானமாக 300 யூரோக்கள் விற்பனையாளர்கள் பெறுகின்றனர் என்றும் பொலீசாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இந்த விற்பனையில் ஈடுபடுகின்றவர்கள் வெளிநாட்டைசேர்ந்தவர்கள் என்றும் அவர்களில் பெரும்பாலானோர் நிரந்தர வதிவிட அனுமதி அற்றவர்களாகவும் உள்ளனர். இவர்கள் தங்கள் ஜீவியத்திற்கு நாள் ஒன்றிற்கு 10 யூரோக்கள் இவ் விற்பனை மூலம் பெறுவதாகவும் தெரிவித்துள்ளனர்.



## 10 வருடமாக வாழ்ந்த ருமேனியஇனத்தவர் செந்–தெனிஸ் இலிருந்து பலவந்தமாக வெளியேற்றம்

செந்-தெனிஸ், ஸ்ரட்-டி-பிரான்ஸ் இற்கு (Stade-de-France) அண்மையாக இருந்த தரிசு நிலங்களிலுள்ள தற்காலிக கொட்டகைகளில் (Camp) வசித்து வந்த ருமேனியர்கள் 05.07.2010 இல் பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். பாடசாலைகளில் கல்வி பயின்ற குழந்தைகள் உட்பட 150 இற்கும் மேற்பட்டோர் 75 CRS பொலிஸாரின் உதவியுடன் வெளியேற்றப் பட்டுள்ளனர். பாரிஸ் மாகாணத்தில் உள்ள மிகவும் பழமையான தற்காலிக குடியிருப்புக்களில் இருந்து வெளியேற்றப்பட்ட இவர்களின் நலன்புரிச் சங்கப் பிரதிநிதிகள் செந்-தெனிஸ் நகரசபை அதிகாரிகளையும் நகரபிதாவையும் சந்தித்து தங்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்கும் தற்காலிக வசிப்பிட வசதிகளை செய்து தரவேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர். இவர்கள் தங்கி இருந்த இடம் அரசுக்குச் சொந்தமானதென்றும் தண்ணீர் - மலசலகூட இணைப்புக்களைக் கொண்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுள் சிலர் பிரான்ஸ் பிரதேசத்தை விட்டு கட்டாயமாக வெளியேற வேண்டும் என பிரான்ஸ் அரசால் கேட்டுக்கொள்ளப் பட்டவர்களாவர். எனினும் சிலர் ருமானியா நாட்டுக்கு சென்று திரும்பி மேல் மனு செய்திருந்தவர்களென பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த ருமேனியரான மிஸ்ஷா என்பவர் கூறுகிறார். தங்கள் வதிவிடங்களை உடைத்து கால அவகாசம் தராமல் உடனடியாக பொலிஸ் வன்முறை பிரயோகிக்கப்பட்டு தாங்கள் வெளியேற்றப்பட்டதாகஅங்கு தங்கியிருந்த ருமேனியர்கள் தெரிவிக்கும் அதேவேளை 2007ம், 2010ம் ஆண்டுகளில் இவர்களை வெளியேற்றம் செய்வதற்கான நீதிமன்ற தீர்மானங்கள் விநியோகிக்கப் பட்டிருந்ததாக பொலிஸ் ஆணையகம்தெரிவிக்கின்றது. ஜித்தான் என அழைக்கப்படும் போலந்து, செக்கோஸ்லவேக்கியா போன்ற நாடுகளில் இருந்து பிரான்ஸ் வந்து தங்கியிருப்பவர்களையும் பொலிஸார் பல இடங்களில் இருந்து வெளியேற்றியுள்ளனர். இவ்வருட ஆரம்பத்திலிருந்து எடுக்கப்பட்ட கணிப்பீட்டின்படி

செந்தெனிஸ் மாவட்டத்தில் மாத்திரம் இவ்வாறான குடியிருப்புக்கள் 59 இருந்தன என்றும் அவற்றுள் 35 முகாம்களிலிருந்து ஜித்தான் மற்றும் ருமேனியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.





சங்கீதா அச்சகம்

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள், வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும் நாடுங்கள்!

Tél./Fax : 01 44 72 08 94

E-mail: sangeethafrance@yahoo.com




39 Bd de la Chapelle
75010 Paris
M°: LA CHAPELLE